சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP No.163/2020

ம.சா.1

நாள். 18.10.2024.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | லோகஜீத் | மதம்: | --- |
| தகப்பனார்/கணவர் பெயர்: | பிரபாகரபாண்டியன் | ஜாதி: | --- |
| கிராமம்: | க.புதூர் பழைய தெரு | வேலை: | --- |
| வட்டம்: | எடப்பாடி | வயது: | --- |

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் கண்டுள்ள சான்றாவணங்களின் பட்டியலில் வரிசை எண் 1 முதல் 20 வரையிலான ஆவணங்கள் முறையே ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தின் போது நான் ஏற்காட்டிலிருந்து சேலம் நோக்கி சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன். விபத்தானது ஏற்காடு மலைப்பாதையில் 60 அடிபாலம் அருகில் நடந்தது. விபத்து நடந்த இடத்தில் மலைப்பாதை என்பதால் லாரி மெதுவாக தான் மேல்நோக்கி சென்றது என்றால் சரியல்ல. அந்த இடம் குறுகலான இடம் என்றால் சரியல்ல. அந்த இடம் வளைவான பகுதி என்றால் சரியல்ல. நான் தான் மேலிருந்து கீழ் நோக்கி வேகமாக வந்து

லாரி மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனகுறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னர் நான் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அங்கு தான் எனக்கு கால் அகற்றப்பட்டது என்றால் சரிதான். பின்பு சேலம் அம்மனி மருத்துவமனையில் 2 நாட்களும் பின்பு கோவை ராயல் கேர் மருத்துவமனையில் 30 நாட்களும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். வலது காலை தவிர வேறு எங்கும் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் படிக்கும் போது வேலை செய்து மாதம் ரூ.25 ஆயிரம் சம்பாதித்தற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் படிப்பை முடித்துவிட்டேன். விபத்தின் போது லாரியின் பின் சக்கரம் தான் என் கால் மீது ஏறி காயமானது என்றால் சரிதான். லாரியின் முன்பக்கம் என் மோதியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனகுறைவினால் ஏற்பட்டதால் 2 ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு செலுத்த தேவையில்லை என்றால் சரியல்ல.

Sd/-லோகஜீத்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.